DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. -92/2025

Prosecution PW -3

| | | |
|---|---|---|
| Name | திரு.ராஜேஷ்கண்ணன் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 10.03.2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused absent. 355 BNSS petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்பொழுது கீழையூர் காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.02.2025ம் தேதி நான் மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் நகர காவல் ஆய்வாளராகப் பணியிலிருந்தபோது, உதவி ஆய்வாளர் கோகுலகண்ணன் என்பவர் குற்ற எண்.763/2013 பிரிவு 8(c), 20(b)(ii)(B) of NDPS Actன் கீழ் வழக்கு பதிவு செய்து, முதல் விசாரணை செய்து மேல் விசாரணைக்காக வழக்கு நிலுவையிலிருந்த போது, நான் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் மாதிரி தடயத்தை இரசாயண பகுப்பாய்விற்காக இரண்டாம் நிலை காவலர் மகாதேவி என்பவர் மூலம் தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். இரண்டாம் நிலை காவலர் மகாதேவி மற்றும் தடயத்தை பகுப்பாய்வு செய்து அறிக்கை வழங்கிய தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் உதவி இயக்குநர் காயத்ரி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பகுப்பாய்வு அறிக்கை பெற்றேன். பகுப்பாய்வு அறிக்கை அதசாஆ**.6.** இத்துடன் என் விசாரணையை முடித்து எதிரியின் மீது பிரிவு 8(c), 20(b)(ii)(B) of NDPS Act க் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை எதிரி தரப்பில்</u>

இவ்வழக்கின் தடயப்பொருள் 18.02.2025ம் தேதி தான் இரசாயண பகுப்பாய்விற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 21.07.2013ம் தேதி கைப்பற்றப்பட்ட தடயப்பொருள் நீதிமன்றத்திற்கு 17.02.2025ம் தேதி தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் தடயப்பொருள் எங்கு யார்

வசம் இருந்தது என்பதனை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும் சாட்சிக்குப் படித்து
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்
கொள்ளப்பட்டது.

ஒம்/-...ஜி.சுந்தரராஜன்,
கூடுதல் மாவட்ட(ம) அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்